# அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு



சகோ. பிரன்ஹாம் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: சுகமளித்தல் (புற்று நோய் என்பது என்ன), செப்டம்பர் 4, 1953, பத்தி எண் 52

52. பிறகு எலியா, அவன் உள்ளே பிரவேசித்த போது, அவன் தரையில் மேலும் கீழும் நடந்தான், அவர்களில் யாரையும் அவனோடு அழைத்துச் செல்லவேயில்லை. அவன் தனியாகச் சென்றான். அவன் ஜெபித்து, ஜெபித்துக் கொண்டேயிருந்தான், பிறகு சென்று, தன்னுடைய முகத்தை பிள்ளையின் முகத்திற்கு மேலாக வைத்தான், அப்போது பிள்ளை ஏழு தரம் தும்மி, உயிரடைந்தான். அது சரிதானா? நிச்சயமாக.

மனோசாஸ்திரம் அல்ல, நண்பர்களே, ஆனால் தேவனுடைய வல்லமை மட்டுமே. இயேசு, "நீங்கள் ஜெபம் பண்ணும்போது, மாயக் காரர்களைப் போல, நின்று, கற்பிக்கப்பட் டிருக்கிற மிகவும் பெரிய அழகான ஜெபங் களைச் செய்யாதீர்கள். நீங்களோ அறை வீட்டிற்குள் பிரவேசித்து, கதவை அடைத்து,

அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு” என்றார். அது எப்போதுமே அந்தவிதமாகத்தான் இருக்கிறது. தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள்.

★★★★★



## செய்தி: விசுவாசமே நமது ஜெயம், அக்டோபர் 4, 1958, பத்தி எண் 184

184. நான் மதவெறிப்பிடித்தவனாக (fanatically) இல்லை என்று நம்புகிறேன். ஆனால் இப்பொழுது நான் என்னுடைய அறைக்குள் சென்று, கதவை ஒன்றாக இழுத்துப் பூட்டிவிடுவது போன்று எனக்குத் தோன்றுகிறது, ஒரு இரகசிய அறைவீட்டிற்குள் பிரவேசித்து, கதவுகளை அடைப்பது. அப்போது இப்பொழுது சுற்றிலும் இருக்கிற கூட்டத்தினர் எல்லாரை விட்டும் தனிமைப்படுத்திக்கொள்கிறேன், பாருங்கள். "பிறகு அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு, அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற அவர் வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார். கேளுங்கள், அப்பொழுது கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது திறக்கப்படும்; தேடுகிற யாவரும், கண்டடைகிறார்கள்."

★★★★★